**சுருக்கம்**

எரிசக்தித்துறை – நில எடுப்பு – நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை வட்டம், கொல்லிமலை நீர்மின்திட்டம் – வளப்பூர்நாடு மற்றும் அரியூர்நாடு நாடு முதலான கிராமங்கள் – 15.52.5 ஹெக்டேர் ரயத்துவாரி புஞ்சை நிலங்கள்– நியாயமான இழப்பீடு பெறும் உரிமை மற்றும் நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மீள் குடியமர்வில் ஒளிவு மறைவற்ற தன்மைச்சட்டம் (RFCTLARR Act) 2013–இன் படி நில எடுப்பு செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது – மொத்தப்பரப்பு 21.25.25 ஹெக்டேர் (18.21.25 ஹெக்டேர் நன்செய் மற்றும் புன்செய் நிலங்களும் மற்றும் 3.04.0 ஹெக்டேர் கோயில் நிலங்கள்) – பட்டா நிலங்களை தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 1997–இன் படி நில எடுப்பு செய்தல் – 66.02.0 ஹெக்டேர் அரசு புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்தல் – திருத்திய நிர்வாக அனுமதி வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**எரிசக்தி(பி1)த்துறை**

அரசாணை(நிலை)எண்.60 நாள் 10.11.2022

சுபகிருது வருடம்,
ஐப்பசி, 24.
திருவள்ளுவர் ஆண்டு 2053.

படிக்கப்பட்டது:

1) அரசாணை(நிலை)எண்.87, எரிசக்தி(பி1)த் துறை, நாள் 30.10.2019.
2) மாவட்ட ஆட்சித்தலைவர், நாமக்கல் மாவட்டம் அவர்களின் ந.க எண்.4265/2015/H1. நாள் 23.08.2020, 13.2.2021, 14.5.2022 மற்றும் 25.7.2022.
3) முதன்மைச் செயலாளர் / நில நிர்வாக ஆணையர் அவர்களின் க. எண். ஜெ1/08/752/2020, நாள் 22.04.2022 மற்றும் 16.8.2022.

*****

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை வட்டம், வளப்பூர்நாடு மற்றும் அரியூர்நாடு ஆகிய வருவாய் கிராமங்களில் கொல்லிமலை நீர்மின் திட்டத்திற்கு தடுப்பணைகள் கட்டுவதற்காக 15.52.5 ஹெக்டேர் பட்டா நிலங்களை நியாயமான இழப்பீடு பெறும் உரிமை மற்றும் நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மீள்

(த.பி.பா)

குடியமர்வில் ஒளிவு மறைவற்ற தன்மைச்சட்டம், 2013 (Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013 (RFCTLARR Act, 2013))–இன் கீழ் கையகப்படுத்தவும் மற்றும் 30.90.2 ஹெக்டேர் பரப்புள்ள அரசு நிலங்களை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யவும் நிர்வாக அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2) மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் நில நிர்வாக ஆணையர் அவர்கள், அரசாணை(நிலை) எண்.87, எரிசக்தி (பி1) துறை, நாள் 30.10.2019–இன் படி 15.52.5 ஹெக்டேர் பட்டா நிலங்களை நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான இழப்பீடு பெறும் உரிமை மற்றும் நிலம் கையகப்படுத்துதல் மறுவாழ்வு மற்றும் மீள் குடியமர்வில் ஒளிவு மறைவற்ற தன்மைச் சட்டம், 2013–இன்படி, நில எடுப்பு செய்யவும், 66.03.2 ஹெக்டேர் அரசு புறம்போக்கு நிலங்களை, நில உரிமை மாற்றம் செய்யவும் ஆணையிடப்பட்டுள்ளது என்றும், பின்னர் தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 1997–இன் படி திருத்திய நிர்வாக அனுமதி கோரிய முன்மொழிவின்படி 18.59.25 ஹெக்டேர் பட்டா நிலங்களை நில எடுப்பு செய்யவும், 25.39.0 ஹெக்டேர் அரசு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்யவும் அறிக்கை அனுப்பப்பட்டது என்றும், நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தற்போது அனுப்பியுள்ள அறிக்கையில் 18.21.25 ஹெக்டேர் பட்டா நிலங்கள் தேவைப்படுவதாகத் தெரிவித்துள்ளார் என்றும், இது தொடர்பாக நீர் மின்திட்டத்திற்கான வரைவுகள் சரிசெய்யப்பட்டு, கேட்பு நிறுவனத்தினரிடமிருந்து திருத்திய கேட்பு படிவம் பெறப்பட்டு, அதன் அடிப்படையில் தற்போது 18.21.25 ஹெக்டேர் பட்டா நிலங்கள் மட்டும் நில எடுப்பில் கவரப்படுகிறது என்றும், ஏற்கெனவே, நியாயமான இழப்பீடு பெறும் உரிமை மற்றும் நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மீள் குடியமர்வில் ஒளிவு மறைவற்ற தன்மைச் சட்டம், 2013–இன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட அரசாணை, பின்னர் தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம் 1997–இன் கீழ் அனுப்பப்பட்ட முன்மொழிவு மற்றும் தற்போது வரப்பெற்ற திருத்திய நிர்வாக அனுமதி கோரப்பட்டுள்ளதன்படி, நில எடுப்பு மற்றும் நில உரிமை மாற்றத்திற்கான முன்மொழிவு முதலானவற்றின்படி, நில எடுப்பு மற்றும் நில உரிமை மாற்றத்திற்குட்படும் நிலங்களின் பரப்பு விவரங்களைப் பின்வருமாறு தெரிவித்துள்ளதாகவும் விவரித்துள்ளார்:–

| நிலத்தின் வகைபாடு | நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட அரசாணையின்படி பரப்பு (ஹெக்டேரில்) | தொழிலியல் நோக்கத்திற்கான நில எடுப்பு சட்டத்தின் படி அனுப்பப்பட்ட திருத்திய முன்மொழிவின்படி பரப்பு (ஹெக்டேரில்) | தற்போது மாவட்ட ஆட்சியரிடமிருந்து வரப்பெற்ற திருத்திய முன்மொழிவின்படி பரப்பு (ஹெக்டேரில்) |
|---|---|---|---|
| பட்டா நிலங்கள் | 15.52.5 | 18.59.25 | 18.21.25 |
| அரசுநிலங்கள் | 30.92.2 | 25.39.0 | 25.39.0 |

| | | | |
|---|---|---|---|
| வன நிலங்கள் | 5.50.0 | 5.50.0 | 5.50.0 |
| கோயில் நிலங்கள் | 3.04.08 | 3.04.08 | 3.04.08 |
| ஆறு புறம்போக்கு | 35.13.0 | 35.13.0 | 35.13.0 |
| **மொத்தம்** | **90.11.78** | **87.65.33** | **87.27.25** |

3) மேற்கண்ட சூழ்நிலையில், நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிக்கையை ஏற்று, நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை வட்டம், வளப்பூர் நாடு, அரியூர் நாடு மற்றும் திண்ணனூர் நாடு முதலான கிராமங்களில், கொல்லிமலை நீர் மின் திட்டத்திற்காக மொத்தம் 21.25.25 ஹெக்டேர் (18.21.25 ஹெக்டேர் நஞ்சை மற்றும் புஞ்சை மற்றும் 3.04.0 ஹெக்டேர் கோயில் நிலங்கள்) பரப்புள்ள பட்டா நிலங்களை, தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 1997–இன் கீழ் அல்லது தனி நபர் பேச்சு வார்த்தை மூலம் நில எடுப்புச் செய்யவும் மற்றும் 66.02.0 ஹெக்டேர் அரசு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்தும் திருத்திய நிர்வாக அனுமதி வழங்கிட உரிய அரசாணை பிறப்பிக்கலாம் என நில நிர்வாக ஆணையர் அவர்கள் பார்வை மூன்றின் மூலம் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார். மேலும், இந்நில எடுப்பு தொடர்பாக ஏற்கெனவே உரிய நிலத் திட்ட அட்டவணை கேட்பு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது என்றும், இத்திட்டத்தை செயல்படுத்தும் காலத்தில் தொழில் நுட்ப காரணங்கள் மற்றும் திட்டத்தின் அப்போதைய நிலையை பொறுத்து சிறுமாற்றங்கள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

4) நில நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை வட்டம், வளப்பூர் நாடு, அரியூர் நாடு மற்றும் திண்ணனூர் நாடு முதலான கிராமங்களில், கொல்லிமலை நீர் மின் திட்டத்திற்காக மொத்தம் 21.25.25 ஹெக்டேர் (18.21.25 ஹெக்டேர் நஞ்சை மற்றும் புஞ்சை மற்றும் 3.04.0 ஹெக்டேர் கோயில் நிலங்கள்) பரப்புள்ள பட்டா நிலங்களை தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 1997–இன் கீழ் அல்லது தனி நபர் பேச்சு வார்த்தை மூலம் நில எடுப்புச் செய்யவும் மற்றும் 66.02.0 ஹெக்டேர் பரப்பு அரசு நிலங்களை பொது நலன் கருதி நில உரிமை மாற்றம் செய்யவும் திருத்திய நிர்வாக அனுமதி வழங்கவும் அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

5) அரசு ஆணையிட்டவாறு, இது தொடர்பாக உரிய தொடர் நடவடிக்கை மேற்கொண்டு அரசுக்கு அவ்வப்போது அறிக்கை சமர்ப்பிக்குமாறு நில நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5 மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் மாவட்டம், நாமக்கல் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

6) இவ்வாணை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.3087337/நிநி2/2022, நாள் 17.09.2022 மற்றும் நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.43794/ PW-II/2022, நாள் 31.10.2022 வாயிலாக பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ரமேஷ் சந்த் மீனா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

**பெறுநர்**

ஆணையர், நில நிர்வாக ஆணையரகம்,
'எழிலகம்' , சேப்பாக்கம், சென்னை-5.
மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் மாவட்டம். நாமக்கல்.
முதன்மைச் செயலாளர்/தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், சென்னை-2.

**நகல்:**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9,
(கோப்பு எண்.3087337/நி.நி2/2022),
நிதி( PW-II)த் துறை, தலைமைச் செயலகம்,
சென்னை-9, (கோப்பு எண். 43794/பொ.ப-2/2022)
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
தலைமைச்செயலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை)
அவர்களின் நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வை) அவர்களின் நேர்முக உதவியாளர்,
தலைமைச் செயலகம், சென்னை-9.
உதிரி நகல்/இருப்பு கோப்பு.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்,
10/11/2022